**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை**

**கிருஷ்ணகிரி மாவட்டம்**

**முன்னிலை : திரு.சி. ராஜசேகர்.,பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**2017-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 -ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**அசல் வழக்கு எண்.59/2016**

1. கமலா
2. சங்கீதா .. வாதிகள்

//எதிராக//

1. பொன்னுசாமி
2. பெருமாள்
3. பிரபு
4. மலர்கொடி
5. சென்னம்மாள் ..பிரதிவாதிகள்

WEB COPY

இவ்வழக்கானது 06.12.2017 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சக்திவேல், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.மூர்த்தி, அவர்கள் ஆஜராகி வக்காலத்து மற்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்து, பின்னிட்டு, வா.சா.1-ஐ பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் போது ஆஜரில்லாமல் தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டு, வாதி தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**தீர்ப்புரை**

1. இவ்வழக்கானது வழக்கு "அ" அட்டவணை சொத்தினை பொது கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து வாதிகள் அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ எந்த வகையிலும் தடை இடைஞ்சல் செய்யாத படிக்கு நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் வழங்கவேண்டியும், வழக்கு "அ" அட்டவணை சொத்தினை சர்வே எண்.47/2டி வழியாக பொது வண்டி வழி பாதை வழியாக வாதிகள் சென்று வழக்கு வழக்கு "அ" அட்டவணை சொத்தை அனுபவிப்பதை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ எந்த வகையிலும் தடை இடைஞ்சல் செய்யாத படிக்கு நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் மற்றும் தாவா செலவுத்தொகை கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதிகளின் வழக்குரை சங்கதி சுருக்கம்.**

"அ" அட்டவணை சொத்தும், மற்ற இதர சொத்துக்களும் முதலில் 1-ஆம் பிரதிவாதியான வாதிகளின் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். 1-ஆம் பிரதிவாதிக்கு கமலநாதன் என்பவரும் 2-ஆம் பிரதிவாதியும் வாரிசுகள் ஆவார்கள் என்றும், கமலநாதன் 21.10.1991-லேயே வாதிகள் மற்றும் அவர்களுடைய தாயார் கலைவாணி ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், அவருடைய இறப்பிற்கு பிறகு வாதிகளும், பிரதிவாதிகளும் கூட்டுக்குடும்ப சொத்துக்களை கூட்டாக அனுபவித்துவந்து 1-ஆம் பிரதிவாதியானவர் ஊர்பொதுவர்கள் முன்னிலையில் கூட்டுக்குடும்ப சொத்துக்களை 3 சமபாகங்களாக பிரித்து வாதிகளுக்கும், 1-ஆம் பிரதிவாதி மற்றும் 2-ஆம் பிரதிவாதி ஆகியோர்களுக்கு தலா 1 பாகம் கொடுக்கப்பட்டது என்றும், அந்த பாகமானது 29.01.1992 ஆம் தேதியிட்ட வாதிகளின் தாயார் கரைவாணியை கார்டியனாக நியமித்து ஒரு தானசெட்டில்மெண்டு ஆவணத்தில் "அ" அட்டவணை சொத்தாக காண்பித்து எழுதிவைத்துள்ளார் என்றும், வாதிகளின் தாயார் 13.05.2005-ல் இறந்தபிறகு வாதிகளின் அனுபவ சுவாதீனத்தை 2 முதல் 5 பிரதிவாதிகள் 1-ஆம் பிரதிவாதியின் துணையுடன் இடைஞ்சல்கள் செய்துவருகிறார்கள் என்றும், 2/3 பாகம் 1-ஆம் பிரதிவாதியிடமிருந்து 2-ஆம் பிரதிவாதி தான பத்திரம் மூலம் தானம் பெற்றதால் வாதிகளின் 1/3 பங்கு கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்கும் பாத்தியம், ஆயில் எஞ்சினின் 1/3 பாத்தியம் மற்றும் வாய்க்கால் வழி பாத்தியம் ஆகியவைகளை பிரதிவாதிகள் இடைஞ்சல்கள் செய்துவருகிறார்கள் என்றும், மேலும் பிரதிவாதிகள் ஆயில் என்ஞினை விற்று மின் மோட்டார் பொறுத்தப்பட்டதாகவும், மேற்படி பாதை வழக்கு "அ" அட்டவணை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளதென்றும், 29.08.1997-ல் வண்டி பாதையை பொறுத்து பத்திரம் எழுதி அதில் 1-ஆம் பிரதிவாதி மற்றும் 9 நபர்களின் பெயர்களில் இருந்துவந்து மற்ற 9 நபர்கள் ஆட்சேபணை இல்லாத நிலையில் 1-ஆம் பொது வண்டி பாதையை பயன்படுத்தி வாதிகளை வழக்கு "அ" அட்டவணை சொத்திற்கு செல்ல வீண் இடையூறு செய்துவருகிறார்கள் என்றும், 1-ஆம் பிரதிவாதியின் மகன் வழி பேத்திகளான வாதிகளுக்கு தாவா வண்டிவழிப்பாதை உரிமையுள்ளது என்றும், மேலும் வண்டிவழி இடைஞ்சல்களை பொறுத்து 30.11.2015 தேதியிட்ட காவல் கண்காணிப்பாளிடம் மனு கொடுத்துள்ளார்கள் என்றும், எனவே வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 3-ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட 1, 2 மற்றும் 4, 5-ஆம் பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் முக்கிய சாராம்சம்:**

வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் உறவுமுறைகள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. என்றும், மேலும் இவ்வழக்கானது சட்டப்படிக்கும், நியாயபடிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், 29.01.1992 ஆம் தேதியிட்ட வாதிகளின் தாயார் கலைவாணியை கார்டியனாக நியமித்து ஒரு

தானசெட்டில்மெண்டு ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது உண்மை என்றும், தானப்பத்திரத்தில் உள்ள சொத்துக்களை தவிர வாதிகளுக்கு எந்த விதமான உரிமையும் இல்லை. வாதிகள் முன் வைக்கப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானவைகள் என்றும், 29.08.1997-ல் வண்டி பாதையை பொறுத்து பத்திரம் எழுதி அதில் 1-ஆம் பிரதிவாதி மற்றும் 9 நபர்களின் பெயர்களில் இருந்துவந்துள்ளது என்றும், 29.09.1996-ல் மின் இணைப்பு பெற்று மின் மோட்டாரைக்கொண்டு தண்ணீர் இறைத்து விவசாயம் செய்து வந்ததாகவும், 1-ஆம் பிரதிவாதி தன் பெயரில் மின் இணைப்பு பெற்று அனுபவித்து வந்த மின் மோட்டாரில் வாதிகளுக்கு எந்தவிதமான பாத்தியமும் உரிமையும் இல்லை என்றும், மேற்படி காண்பிக்கப்பட்டுள்ள வண்டிப்வழிபாதை மற்றும் மின்மோட்டார் இணைப்பு ஆகியவைகளில் வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், மேலும் 1/3 பங்கு தண்ணீரை ஆயில் என்ஜின் மூலம் எடுத்துச்செல்வதை பிரதிவாதிகள் எவ்வகையிலும் தடைசெய்யவில்லை என்றும், மேலும் வாதிகளுக்கு தாவா சொத்து குறித்து முழு விவரம் தெரியாமல் அ அட்டவணை சொத்து என்றும் அ அட்டவணை சொத்து என்றும் தாவா பிராதில் அ அட்டவணை மற்றும் பி அட்டவணை என காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், சொத்துவிவரம் சரியில்லை என்றும், நீதிமன்ற கட்டணம் சரியானதல்ல என்றும் தாவா தள்ளுபடி செய்யவேண்டியதென்றும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

4. இவ்வழக்கில் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை நன்கு பரிசீலித்து முழுமையான நீதிபரிபாலனைக்காக வேண்டி இந்நீதிமன்றத்தால் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1.தாவா அ அட்டவணை சொத்து சர்வே எண்.47/2டி வழியாக பொது வண்டி வழிப்பாதை வழியாக வாதிகள் அ அட்டவணை சொத்திற்கு போக வர உரிமை உள்ளதா?

2. தாவாவில் வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை தடை உத்தரவு கிடைக்கத்தக்கதா?

3. பொது கிணற்றிலிருந்த ஆயில் எஞ்சின் விற்று, மின் மோட்டார் பொருத்தப்பட்டதாக சொல்வது சரியா?

4. தாவா பி அட்டவணை சொத்திலுள்ள வண்டி வழிப்பாதை 1-வது பிரதிவாதிக்கும், ஆவண எண்.1447/1997 ___ல் கண்டவர்களுக்கும் மட்டுமே பாத்தியம், வாதிகளுக்கு அதில் உரிமை இல்லை என்பது சரியா?

5. வாதிகள் கோரும் செலவுத்தொகை உத்தரவு கிடைக்கதக்கதா?

6. இதர பரிகாரம் என்ன?

இவ்வழக்கு விசாணையின்போது வாதிகள் தரப்பில் 2-ஆம் வாதியே வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. பிரதிவாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியை குறுக்கு விசாரணை செய்யாமலும் இவ்வழக்கை தொடர்ந்து நடத்தாமலும் இருந்துவந்ததால் இவ்வழக்கு பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. வாதி தரப்பு வழக்குரை சங்திகளை மெய்ப்பிக்கும் பொருட்டு 2-ஆம் வாதியே வா.சா.1 ஆக நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ள நிலையில் அவருடைய முதன்மை சாட்சியமானது அப்படியே வழக்குரை சங்கதியை பிரதிபலிப்பதாக உள்ளது. மேலும் அவர் எதிர்வழக்குரை சங்கதிகளை மறுத்தும் சாட்சியத்தை முன்னிருத்தியுள்ளார். வாதியின் வழக்குரை சங்கதிகளை மெய்பிக்கும் பொருட்டு 29.02.1991 தேதியிட்ட 1-ஆம் பிரதிவாதி வாதிகளின் பெயர்களில் எழுதிவைத்துள்ள தான செட்டில்மெண்டு ஆவணம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 21.06.2016 தேதியிட்ட கணிணி பட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 22.06.2016 தேதியிட்ட அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், அடங்கல் கணக்கு பதிவேடு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 29.08.1997 தேதியிட்ட பொது வண்டி வழி பாத்தியம் பொறுத்த கிரைய பத்திரம் பத்திர பதிவு நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 30.11.2015 தேதியிட்ட காவல் கண்காணிப்பாளிடம் கொடுத்த மனு வா.சா.ஆ.6 ஆகவும், 01.02.2016 தேதியிட்ட புகார் மனு நகல் வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

7. வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ——ஐ பரிசீலிக்கையில் அதில் "அ அட்டவணை" சொத்தானது 1-ஆம் பிரதிவாதியால் வாதிகளுக்கு வாதிகளின் தாயார் கலைவாணி இருந்தபோது அவரை கார்டியனாக நியமித்து தானப்பத்திரம் எழுதி பத்திரம் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. மேலும் மேற்படி தான செட்டில்மெண்டு பத்திரத்தில் "கிணறு 1 அதில் உள்ள 6 எச்.பி. ஆயில் என்ஜீன் பம்பு பைப் உட்பட இவைகளில் பொதுவில் 3-ல் 1 பங்கும் ஷ நிலத்தில் உள்ள இளம் தென்னை மரங்கள் 1.1/2 வயதுள்ள இரண்டும் உட்பட ஷ புராவும் மற்றும் ச.நெ.47/2டி யில் தண்ணீர் செல்லும் வாய்க்கால் பாத்தியம் வழி பாத்தியம் என் மீதி உள்ள நிலங்களில் உங்களுக்கு மாமூலாக உண்டு "என்று குறிப்பிட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 அசல் ஆவணத்தில் வழி பாத்தியம் இடை செரிகலாக உள்ள போதிலும் இந்நீதிமன்றத்தில் 20.12.2017 அன்று தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவண எண்.102/1992 ஆவணத்தின் சான்றிட்ட நகலில் மேற்படி வழி பாத்தியம் என்ற வார்த்தை குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அது பின்னிட்டு சேர்க்கப்பட்டுள்ளதல்ல என்றும், வா.சா.ஆ.1 ஆவணத்தின் பகுதிதான் என்றும் தெளிவாகிறது. அதேபோல் வா.சா.ஆ.5 ஆவணத்தை

பரிசீலிக்கையில் 1-ஆம் பிரதிவாதி 3-வது நபராக இருந்து "அ அட்டவணை" சொத்து போக மீதமுள்ள தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் 9 நபர்களுடன் சேர்ந்து பொது வண்டி வழி பாதையாக பொது வண்டி வழி பாத்திய பத்திரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது தெளிவாகிறது. அந்த வா.சா.ஆ.5 ஆவணத்தில் எதிர்பாராமல் குடும்ப சூழ்நிலையின் காரணமாக ஒருவர் விற்க நேரிட்டால் அதில் சொத்தை கிரையம் பெரும் நபர்களுக்கும் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கும் இந்த பொது வண்டி வழி பாதையில் போக வர வண்டி வழி பாத்தியம் உண்டு "என குறிப்பிடப்பட்டுள்ளது புலனாகிறது. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைகளை பரிசீலிக்கையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் இடையிலான உறவுமுறைகள் மறுக்கப்பட்வில்லை. மேலும் அதேபோல் வா.சா.ஆ.1 ஆவணமான தானப்பத்திரம் மூலம் "அ அட்டவணை"சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதும், இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாகும். இந்நிலையில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதிகளுக்கு 1-ஆம் பிரதிவாதி தானம் செய்து கொடுத்ததுபோக என் மீதி நிலத்திற்கு போக வண்டி வழி பாத்தியம், கிணறு 1/3 பாகம் உள்ளதாக குறிப்பிட்டு தானம் கொடுத்திருக்கும் சூழ்நிலையில், மீதி பாகத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.5 ஆவணத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது வண்டி வழி பாதையில் வாதிகளுக்கும் வழி பாத்தியம் உள்ளது என்பதற்கு தகுந்த முதல் நோக்கு எழுந்திருப்பதாக வாதிகள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக இந்நீதிமன்றம் அறிகின்றது. அதேபோல் வா.சா.ஆ.1 ஆவணத்திலேயே பொது கிணற்றில் 1/3 பங்கு நீர் இறைப்பு பாகம் வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் என்ஜின் ஆயில் மோட்டாரை எடுத்து அதனை விற்ற பணத்தில்தான் மின் இணைப்பு மோட்டார் வாங்கி பொருத்தப்பட்டுள்ளதாகவும், அதில் வாதிகள் தண்ணீர் எடுத்து அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ தடை இடைஞ்சல்கள் செய்யக்கூடாது என்கிற நிரந்தர தடை உத்தரவு கட்டளை பரிகாரம் கோரியுள்ளதை பொறுத்து பரிசீலிக்கையில் கிணற்றில் 1/3 பங்கு தண்ணீர் இறைப்பு பாத்தியம் உள்ளதை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ள அதே சூழ்நிலையில் என்ஜின் ஆயில் மோட்டாரை விற்று தான் மின் மோட்டார் வாங்கியதாக சொல்லியிருக்கும் சங்கதிகளை மறுத்துள்ளனர். வாதிகள் தங்களுடைய சாட்சிகளில் மேற்படி சங்கதி குறித்து நிரூபணம் செய்ய எந்த ஒரு ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே இந்நீதிமன்றமானது வாதிகளுக்கு பொது கிணற்றில் தண்ணீர் இறைப்பு 1/3 பாகம் உள்ளது குறித்து தகுந்த முதல் நோக்கு எழுந்துள்ளதை மட்டும் கருத்தில் கொள்கிறது. ஆனால் எஞ்சின் ஆயில் மோட்டாரை விற்று தான் மின் மோட்டார் இணைப்பு பிரதிவாதிகள் பெற்றிருக்கிறார்கள் என்ற சங்கதிகளை வாதிகள் தரப்பில் தகுந்த ஆவணங்களின் வாயிலாக நிரூபிக்க தவறியுள்ளதாகவே இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகின்றது.

WEB COPY

மேலும் வாதிகள் அவர்களது பிராதில் மேற்படி பரிகாரமாக வழக்கு "அ அட்டவணை"சொத்தில் பொது கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வாதிகள் அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ எவ்வகையிலும் தடை இடைஞ்சல்கள் செய்யாதபடி நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளது தவிர்த்து மின் மோட்டார் மற்றும் மின் இணைப்பில் பங்கு கோரி பரிகாரம் கோரவில்லை என்றும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. எனவே வாதிகள், பிரதிவாதிகள் தரப்பு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதையும், வா.சா.ஆ.1 ஆவணத்தின் பொருண்மைகளின் அடிப்படையில் "அ அட்டவணை" சொத்தில் பொது கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பு வாதிகளுக்கு பாத்தியம் உண்டு என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

8. இந்நீதிமன்றத்தில் முன்னிருத்தப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களையும் பரிசீலிக்கையில் பிரிவு 101 இந்திய சாட்சிய சட்டப்படி யார் ஒருவர் நீதிமன்றத்தில் தமக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்படவேண்டுமென்று கருதுகிறார்களோ அவர்தான் அவ்வழக்கை நிரூபிக்க கடமைப்பட்டவர் என்பதும் எனவே வாதிகள் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மெய்ப்பித்திருப்பதாலும், பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து தனது வழக்கை நிரூபிக்க தவறியுள்ளதால் **2012 Vol 5 CTC page 395 Sivaprakasam Vs Dhandapani and** another judgment reported **in 2014 Volume 8 MLJ 478 Russalayyam Vs V.Chellasamy.** மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளை மேற்கோள் காட்டியும், இந்நீதிமன்றத்தில் பிரதிவாதி ஆஜராகாமல் இருந்துவந்ததை கருத்தில்கொண்டு under Section 114 (g) of the Evidence Act, ) எதிரிடை அனுமானம் வாதிகளுக்கு சாதகமாவும், பிரதிவாதிகளுக்கு பாதகமாகவும் இந்நீதிமன்றம் தீர்மானம் மேற்கோள்கிறது.

WEB COPY

முடிவில், வழக்கு "அ" அட்டவணை சொத்தினை பொது கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து வாதிகள் அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ எந்த வகையிலும் தடை இடைஞ்சல் செய்யாத படிக்கு நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் வழங்கியும், ஆனால் என்ஜீன் ஆயில் மோட்டாரை விற்று தான் மின் மோட்டார் இணைப்பு பிரதிவாதிகள் பெற்றிருக்கிறார்கள் என்பது குறித்து வழக்குரையில் காண்பித்துள்ளார்களே தவிர மின் மோட்டாரை பயன்படுத்த வேண்டி எவ்வித பரிகாரமும் கோராத சூழ்நிலையில் அதைபற்றி எந்த பரிகாரமும் இந்நீதிமன்றம் வழங்கவில்லை. மேலும் "அ" அட்டவணை சொத்தின் சர்வே எண்.47/2டி வழியாக பொது வண்டி வழி பாதை வழியாக வாதிகள் சென்று வழக்கு "அ" அட்டவணை சொத்தை அனுபவிப்பதை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ எந்த வகையிலும் தடை இடைஞ்சல் செய்யாத படிக்கு நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் பிறப்பிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சுருக்கு ஒலி வடிவில் சொல்லப்பட்டு அவரால் வரி வடிவில் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22- ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஊத்தங்கரை.**

**சான்றாவணப்பட்டியல்:**

**வாதி தரப்பு சாட்சிகள்:**

| | |
|---|---|
| வா.சா.1 .. | சங்கீதா |
| **பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:** | இல்லை |
| **வாதி தரப்பு சான்றாவணங்கள்:** | |
| வா.சா.ஆ.1/29.02.1991 | தேதியிட்ட 1-ஆம் பிரதிவாதி வாதிகளின் பெயர்களில் எழுதிவைத்துள்ள தான செட்டில்மெண்டு ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.2/21.06.2016 | தேதியிட்ட கணிணி பட்டா சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3/22.06.2016 | தேதியிட்ட அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4/ | அடங்கல் கணக்கு பதிவேடு சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5/29.08.1997 | தேதியிட்ட பொது வண்டி வழி பாத்தியம் பொருத்த கிரைய பத்திரம் பத்திர பதிவு நகல் |
| வா.சா.ஆ.6/ 30.11.2015 | தேதியிட்ட காவல் கண்காணிப்பாளிடம் கொடுத்த மனு |
| வா.சா.ஆ.7/ 01.02.2016 | தேதியிட்ட புகார் மனு நகல் |
| **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:** | இல்லை |

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஊத்தங்கரை.**

WEB COPY

WEB COPY